**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 23/2023</u>**

பெயர் : பக்கிரிசாமி P.W.1.

த/பெ. : முனியாண்டி

தேதி : 01.12.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். தற்போது தாவா சொத்திற்கு வடக்கு மற்றும் மேற்கில் அம்சம் என்பவரின் வயலும், தெற்கில் ரோடும், கிழக்கில் மாரிமுத்து என்பவரின் திடல் இருந்தது தற்போது அதை வேறு நபர் வாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதியின் இடம் தாவா சொத்திற்கு மேற்கில் உள்ளது. அதில் ஓட்டு வீடும் தேக்கு மற்றும் மா மரங்களும் உள்ளன. 1ம் பிரதிவாதியும் நானும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை முனியாண்டி தேவர் அவர்கள் கடந்த 1971 ம் ஆண்டு எழுதிவைத்த உயில் ஆவணத்தின் படி பாத்தியபட்டதாகும்.

2. உயிலில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சொத்துகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்து சம்பந்தமாக எனக்கு ஏதேனும் சிறப்பு அதிகாரம் அந்த சொத்தை பொறுத்து உயிலில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உயிலில் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்தை பொறுத்து வேறு நபருக்கு பத்திரமோ, ஆவணமோ எழுதிக்கொடுக்க சென்றால் எனக்கு அதை தடை செய்ய உயில் மூலம் ஏதேனும் சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதனால் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கோ அல்லது வேறு நபருக்கோ அவரது சொத்தை பொறுத்து 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் கிரயமோ சொத்து உரிமை மாற்று ஆவணமோ செய்வதற்கு என்னால் தடை ஏதும் ஏற்படுத்த இயலாது என்றால் சரியல்ல. மேற்படி தடை ஏற்படுத்துவதற்கு எவ்வித சட்ட முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் உடன்பிறந்தவராக இருந்தாலும், அவரது சொத்தை பொறுத்து நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு அடிப்படையிலேயே தவறானது என்றாலும், அ தனால் நான் கோரிய பரிகாரம் எனக்க கிடைக்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

3. தாவா சொத்தில் உயில் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றது 10 செண்ட் ஆகும். அதேபோல் 1ம் பிரதிவாதிக்கு உயில் மூலம் கிடைக்கப்பெற்றது 10 செண்ட்

ஆகும். அதனால் தாவா சொத்தில் 10 செண்ட் மட்டுமே எனக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதை பொறுத்து மட்டுமே நான் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றாலும், 20 செண்ட் சொத்திற்கு சேர்த்து வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. பிராதில் 20 செண்ட் என்பதை திருத்தம் செய்து 10 செண்ட்டாக மாற்றினால் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த இயலும் என்றால் சரியல்ல. எனவே, வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் சரியல்ல என்றாலும், அதனால் நான் கோரப்பட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.